**மாவனல்ல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாவனல்ல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் மாவனல்ல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மாவனல்ல வாராந்த சந்தை வளவை அபிவிருத்தி செய்வதற்காக செலவிட்ட ரூபா 1,600,000 தொகையை மூலதனமாக்கி இருக்காததுடன் அப்பெறுமானத்தால் மூலதனத்திற்கு வருமானத்தால் பங்களிக்கும் கணக்கும் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 1,660,610 ஆன போதும் அதனை மறைப் பெறுமானமாக ரூபா 1,818,977 ஆக குறைத்து கணக்கீடு செய்திருந்த காரணத்தால் செயற்பாட்டு இலாபமும் அப் பெறுமானத்தால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஆண்டில் நகரின் மலசலகூடத் தொகுதியை நிர்மாணிக்க ரூபா 3,200,000 கடன்கொடுனர் ஏற்பாடு ஒதுக்கியிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் அதற்காக செயற்பட்டிருக்காத காரணத்தால் அப் பெறுமானத்தால் திரண்ட நிதியம் குறைத்து மற்றும் கடன்கொடுனர் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தன. | கடன்கொடுனர் மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல்களை பெற்று 2022 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது தீர்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வழக்கறிஞர் கட்டணம் செலுத்த வேண்டி இல்லாத போதும் 2016 ஆண்டிற்குரியதாக ரூபா 1,773,000 கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | கடன்கொடுனர் மீதிகள் தொடர்பான உறுதிப்படுத்தல்களை பெற்று 2022 இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது தீர்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் 02 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் பயன்பாட்டு பதிவேடு/அறிக்கை பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 710,268 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமானக் கோவை 571(3) | வைப்புக் கணக்கிலுள்ள 03 ஆண்டுகளை விஞ்சிய மீள் செலுத்தும் வேலைகள் மற்றும் உடன்படிக்கை பிணை வைப்பு, நானாவித வைப்பு, கலை மண்டப ஒதுக்கீட்டு வைப்பு மற்றும் உள்ளாச வரி வைப்புக்களின் கூட்டுத் தொகை ரூபா 3,145,283 தொடர்பில் நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவில் தீர்க்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி சுற்றறிக்கை | | | |
| | உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை வழிகாட்டிக் கோவையின் இலக்கம் 01/2010 கொண்ட சுற்றறிக்கையின் 7.4 (iv) பந்தி | சுற்றறிக்கைக்கு மாற்றமாக மருத்துவ காரணமல்லாத அல்லது உள்ளூராட்சிக்கு தொடர்பற்ற காரணங்களிற்காக கூட்டங்களிற்கு சமுகமளிக்காத 59 நாட்களிற்காக 17 அங்கத்தவர்களுக்கு 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் அங்கத்தவ படிகள் ரூபா 900,000 செலுத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் மருத்துவ சான்றிதழை சமர்பிக்கும் அங்கத்தவர்களுக்கு மாத்திரம் செலுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 93,316,542 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 200,260,359 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் 32 அரச சொத்துக்கள் மற்றும் 5210 தனியார் சொத்துக்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வீதவரி மீதி ரூபா 13,298,963 தொகையை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையின் பெறுமளவு கொரோனா தொற்று காரணமாக அறவிட முடியாது போனதாகவும் 2022 ஆண்டினுள் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் 18 இறைச்சிக் கடைகளில், 05 மீன் கடைகளில் மற்றும் 125 ஏனைய கடையறைகளிலிருந்து அறவிட அறவிட வேண்டிய வாடகை மீதி ரூபா 19,189,954 தொகையை அறவிட நடவைடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவில் அறிவூட்டி மற்றும் சலுகை வழங்குவதனூடாக தற்போது கடை வாடகை அறவிடல் மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு நிலுவை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஏனைய வருமானம் | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட விற்பனை, நீர் வரி மற்றும் ஏனைய பெறுவனவுகளின் 05 ஆண்டுகளை விஞ்சிய நிலுவை மீதி ரூபா 2,128,578 ஆனது. | இவ் வருமான நிலுவை மீதியையும் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |